**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 05.11.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

குருநானக் ஜெயந்தி இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பீகாரில் நாளை நடைபெற உள்ள முதல் கட்ட வாக்குபதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்திய விமானப்படையின் வான் வழி பயிற்சிக் குழுவின் விமான கண்காட்சியை குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று பார்வையிட்டார்.

புதுச்சேரியில், தேசிய கடல் மீன் வள கணக்கெடுப்பு 2025 க்கான பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது.

குருநானக் ஜெயந்தி (16)

குருநானக் ஜெயந்தி இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்தி மோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் உள்ளிட்டோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். சீக்கியர்களின் முதன்மை குருவான குருநானக் தேவ்-இன் 556 ஆவது பிறந்த தினம் இன்று உலகம் முழுவதும் உள்ள

சீக்கிய மக்களால் கொண்டாடப்படுகிறது. குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், குருநானக் தேவ்-ன் கொள்கைகளும், மதிப்புகளும் அனைவருக்கும் உந்துசக்தியாக விளங்குவதாகவும், நீதி மற்றும் இரக்கத்தின் அடிப்படையில் வாழ்வதே வெற்றியின் அளவுகோல் என்பது அவரின் வாழ்க்கை நிருபித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், குருநானக்கின் வாழ்க்கையும், போதனைகளும் மனித குலத்திற்கு எப்போதும் வழிகாட்டியாக விளங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், சமத்துவ சிந்தனை கொண்ட சமூகத்தை உருவாக்க குருநானக்கின் போதனைகள் ஊக்கம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

தேவ்-தீபாவளி (12)

புனித நகரமான வாரணாசியில் இன்று தேவ் தீபாவளியின் பிரமாண்ட கொண்டாட்டங்கள் நடைபெற உள்ளது. தேவ் தீபாவளி இருளை நீக்கி, ஒளியின் வெற்றியை குறிப்பதாகும். லட்சக்கணக்கான தீபங்கள் ஆற்றங்கரையை ஒளிரச்செய்து, முழு நிலவு இரவில் கார்த்திக் பூர்ணிமாவில் கொண்டாடப்படுகிறது. தேவ் தீபாவளி என்பது **கடவுள்களின் தீபாவளி** என்று பொருள். வாரணாசியின் கோவில்கள், படித்துறைகள், கூரைகள் மற்றும் கங்கை நதி ஆகியவை விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, ஒளி மண்டலமாக காட்சியளிக்கும். இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்திய கலாச்சாரம் மற்றும் ஆன்மீகத்துடன் தொடர்புடைய இந்த தேவ் தீபாவளி நிகழ்ச்சி அனைவருக்கும் மகிழ்ச்சி, அமைதி, ஆரோக்கியம் மற்றும் செழிப்பை கொண்டு வரட்டும் என்று கூறியுள்ளார்.

*பீகார் 1* (3)

பீகாரில் நாளை நடைபெற உள்ள முதல் கட்ட வாக்குபதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு.......

**(வாய்ஸ்)**

*பீகார் 2* (15)

**(வாய்ஸ்)**

பீகாரில் 18 மாவட்டங்களில் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெறும் இந்த தேர்தலில் 3 கோடியே, 75 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள், ஆயிரத்து 314 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். நாளை காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெற உள்ளது. பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கும், ராஷ்டிரிய ஜனதா தளம் தலைமையிலான மகா கத் பந்தன் கூட்டணிக்கும் இடையே பலமான போட்டி நிலவுகிறது. 122 தொகுதிகளுக்கான 2 ஆம் கட்ட வாக்குப்பதிவு வரும் 11 ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்த 2 கட்ட வாக்குப்பதிவுகளும் வரும் 14 ஆம் தேதி எண்ணப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதனிடையே, புதுடெல்லியில் உள்ள இந்திய சர்வதேச ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை நிறுவனத்தில், சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் திட்டம்-2025 ஐ தேர்தல் ஆணையம் இன்று தொடங்கி உள்ளது. இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக பிரான்ஸ், தென்னாப்பிரிக்கா, பெல்ஜியம், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும்

*பீகார் 3 (11)*

கொலம்பியா ஆகிய 7 நாடுகளை சேர்ந்த 14 பங்கேற்பாளர்கள் நாளை பீகாரில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலின் வாக்குப்பதிவை பார்வையிட உள்ளனர். சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் திட்டத்தின் அடிப்படையில், 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவர்களுக்கு மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்காளர் பட்டியல்களை தயாரித்தல் மற்றும் தேர்தல்களை நடத்துவது குறித்த செயல் விளக்கம் அளிக்கப்பட உள்ளது. இதுகுறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார், கூறுகையில், சர்வதேச பார்வையாளர் திட்டம் என்பது பிற நாடுகளின் தேர்தல் மேலாண்மை அமைப்புகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பையும், ஈடுபாட்டையும் வளர்ப்பதற்கான தேர்தல் ஆணையத்தின் முதன்மை முயற்சி என்று தெரிவித்தார்.

*குடியரசு துணைத் தலைவர் (7)*

இந்திய விமானப்படையின் புகழ் பெற்ற சூரியகிரண் வான் வழி பயிற்சிக் குழுவின் விமான கண்காட்சியை குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று சத்தீஸ்கரில் கண்டு களித்தார். சத்தீஸ்கரின் நவராய்பூரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி அம்மாநிலம் உருவாக்கப்பட்டதன் 25 ஆவது ஆண்டு நிறைவை குறிப்பதாகும். அம்மாநில ஆளுநர் திரு ராமன் தேகா, முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய், மற்றும், முக்கிய பிரமுகர்கள் விழாவில் பங்கேற்றனர்.

*ஜிஎஸ்டி-நாகாலாந்து 1* (6)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், நாகாலாந்து, பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி-நாகாலாந்து 1* (15)

**(வாய்ஸ்)**

பல தொழில்களில் வரி விகிதங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் நாகாலாந்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. உணவகங்கள் மற்றும் தங்கும் இடங்களை உள்ளடக்கிய நாகாலாந்தின் சுற்றுலாத் துறை மேம்பட்டுள்ளது. 7 ஆயிரத்து 500 ரூபாய் வரையிலான வாடகை கொண்ட தங்கும் விடுதிகளில் உள்ள அறைகளுக்கான ஜிஎஸ்டி 15 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாகாலாந்தின் சுற்றுலா துறை வளர்ச்சி பெற்று வருகிறது. இந்த வரிக்குறைப்பு மூலம் ஒட்டுமொத்த செலவுகள் 6.25 சதவிகிதம் முதல், 11 சதவிகிதம் வரை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நாகாலாந்தின் காப்பி விவசாயிகள் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு இடையே போட்டித் தன்மையும் வளர்ச்சியும் மேம்பட வாய்ப்பு உள்ளது. மேலும், அம்மாநிலத்தின் கைவினை கலைஞர்கள், விவசாயிகள், நுண் நிறுவனங்கள் மூலம் வர்த்தகமும், மற்றும்

சுற்றுலாவிற்கான வர்த்த வளர்ச்சியும் மேம்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

*ஜிதேந்திர சிங் (9)*

நாடு தழுவிய டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் பிரச்சாரத்தை, பணியாளர் மற்றும் ஓய்வூதியத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று புதுடெல்லியில் தொடங்கி வைத்தார். நாடு முழுவதும் 2 ஆயிரத்து 500 முகாம்களில் 1 மாத காலம் இந்த பிரச்சாரம் நடைபெறும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஓய்வூதியதாரர்களின் டிஜிட்டல் செயல்பாடுகளை ஊக்குவிப்பதை இந்த பிரச்சாரம் நோக்கமாக கொண்டு செயல்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சாரம் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் உதவியுடன் நடத்தப்படுகிறது.

*மீன்வளத் துறை (11)*

கடல் மீன்வளத்துறையின் விரிவான வளர்ச்சியை நோக்கமாக கொண்ட தேசிய கடல் மீன் வள கணக்கெடுப்பு 2025 கடந்த 3 ஆம் தேதி தொடங்கி, டிசம்பர் 18 ஆம் தேதி வரை அனைத்து கடலோர மாநிலங்களிலும், லட்சத்தீவு மற்றும் அந்தமான் உள்ளிட்ட யூனியன் பிரதேசங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் 4 பிராந்தியங்களிலும் மத்திய மீன் வளத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மீன் வள அளவை நிறுவனம் சார்பில் நடத்தபடும் இந்த கணக்கெடுப்பில் 66 கணக்கெடுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி முகாமில், மீன்வளத்துறை

இயக்குநர் திரு முகமது இஸ்மாயில் கலந்து கொண்டு மீன்வளக் கணக்கெடுப்பு குறித்த பிரசுரங்களை வெளியிட்டார்.

விளையாட்டு (4)

AIFF சூப்பர் கோப்பை 2025- 26 கால்பந்து போட்டியில் இன்று கோவா-வின் ஃபட்டோர்டா-வில் உள்ள ஜேஎல்என் மைதானத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில், பஞ்சாப் எப்சி அணியும், பெங்களூரு எப்சி அணியும் களம் காண்கின்றன.

வானிலை (13)

மத்திய கிழக்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய மியான்மர் கடலோர பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி நேற்று, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்று வடகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய கிழக்கு வங்க கடல்-மியான்மர் கடலோர பகுதிகளில் நிலவுகிறது. அடுத்த 24 மணி நேரத்தில், இது, வடக்கு மற்றும் வடமேற்கு திசையில் நகரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தமிழகத்தின் தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை உள்ளிட்ட 7 மாவட்டங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்றும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய கனமழை பெய்யும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது. மேலும், மத்திய கிழக்கு வங்க கடல் பகுதியில் பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இன்று அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு (15)

மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இன்று புதுடெல்லியில் செயற்கை நுண்ணறிவு நிர்வாக வழிகாட்டுதல்களை இன்று வெளியிட்டது. இந்த வழிகாட்டுதல்கள் பல்வேறு துறைகளில் பாதுகாப்பான மற்றும் பொறுப்பான செயற்கை நுண்ணறிவை உறுதி செய்வதற்கான ஒரு விரிவான கட்டமைப்பாகும். இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் பேராசிரியர் திரு அஜய்குமார் சூட், மற்றும் செயலாளர் திரு எஸ். கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

அதி நவீன கண்டுபிடிப்புகளை வளர்ப்பதற்கும், செயற்கை நுண்ணறிவை பாதுகாப்பாக உருவாக்குவதற்கும் இந்த வழிகாட்டுதல்கள் பெரும் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கனிம இலக்குக்கான இந்தியா ஏஐ ஹேக்கத்தானின் வெற்றியாளர்களும் அறிவிக்கப்பட்டனர். சுரங்கத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய புவியியல் ஆய்வு மையத்துடன் இணைந்து இந்தியா ஏஐ திட்டத்தின் பயன்பாடுகள், மேம்பாட்டு வலையின் கீழ் இந்த ஹேக்கத்தான் ஏற்பாடு செய்யப்பட்டது.